1973 மார்ச் 30]

இந்த வேலையைத் தொடர்ந்து விரைவாக நடத்த வேறு பல கோவில் களிலிருந்து உபரி நிதியை மாற்றிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ஆவுடையார் கோவில் தஞ்சை மாவட்டத்தில் மிகச் சிறந்த கோவிலாகும். இப்படிப் போய்க்கொண்டிருக்கிற போக்கைப் பார்த்தால், அது விரைவாக முடிவதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே அதை 1973-ஆம் ஆண்டுக்குள் நடத்தி முடிப்பதற்குரிய காரியங்களை அரசு விரைந்து செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தற்போது முடிந்துள்ள வேலையைப் பார்ப்போமானால், 1973-ஆம் ஆண்டுக்குள் நம்மாலே முடிக்க முடியாது. ஆனால் இன்னும் கொஞ்ச நாட்களில் முடிப்பதற்குத் தேவையான பண வசதியில்லாத காரணத்தினால், வேலைகள் மந்தமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே தேவையான பணத்தை பழனிக் கோவிலிலிருந்தும், வேறு சில கோவில்களிலிருந்தும் ஆணையருடைய பொது நல நிதியிலிருந்தும் மாற்றித் தந்து விரைவில் இந்த வேலைகளைச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

Hindu Religious and Charitable Endowments (Administration) Department of Tamil Nadu

* 310 *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Government have received any representation that the administration of the Hindu Religious and Charitable Endowments Department should be vested in an autonomous body; and

(*b*) if so, the action taken thereon by the Government?

தமிழக அரசின் இந்து அறநிலைய ஆட்சித் துறை

திரு. ஜி. சுவாமிநாதன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அரசின் இந்து அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகத்தைத் தன்னுரிமையுள்ள ஒரு குழுவின் ஆட்சியில் விட வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை ஏதும் வந்திருக்கிறதா?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : யாரிடமிருந்து அந்தக் கோரிக்கை வந்திருக்கிறது? அதிலே என்ன காரணத்தைக் காட்டியிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, 1970-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இந்துக் கோவில்களுடைய பாதுகாப்புக் குழு சேலத்தில் தங்களுடைய மாநில மாநாட்டைக் கூட்டி வைத்து அந்த மாநாட்டிலே தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் அதிலே இப்படி ஒரு வாரியத்தினிடத்திலே தான் இந்தக் கோவில்களுடைய நிர்வாகப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களே தவிர, அதற்கான காரணங்களை அவர்களுடைய தீர்மானத்திலே விளக்கவில்லை.

Mr. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

(1) பேரவையிலிருந்து செய்தி

Mr. CHAIRMAN : I have to announce to the House that I have received messages from the Deputy Speaker, Legislative Assembly, transmitting copies of the following Bills as passed by the Assembly and signed by him for the concurrence of the Council—

(1) The Tamil Nadu Water Supply and Drainage Board (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 5 of 1973).